Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No.2375/2023

Deposition of Witness for Prosecution<br>Defence DW-1<br>Court

| | | |
|---|---|---|
| Name | : | பாலகுருசாமி |
| Father's Name | : | குழந்தைசாமி |
| Village | : | கரூர் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 20.02.2026

எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக கு.விமு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**C.M.P 4710/2023 கடந்த 09.07.2024 அன்று மனு அனுமதிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் Heera Capital Finance க்காக அதன் உரிமையாளர் பாலகுருசாமி ஆஜர்.**

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பானையின் பெயரில் Heera Capital Finance க்காக அதன் உரிமையாளர் என்ற நிலையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பானையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை கொண்டுவந்துள்ளேனா என்றால் என்னிடம் இருக்கும் ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். அதாவது, 27.08.2010 ம் தேதிய கூட்டுவியாபார ஒப்பந்த பத்திரத்தின் நகல், எதிரியின் கணவர் எங்கள் பைனான்ஸில் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்தியதை நாங்கள் வரவு வைத்துள்ள நோட்டில் கண்ட பதிவு நகல் மற்றும் மேற்படி Heera Capital வங்கி கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி கரூர் மத்திய கிளையில் கணக்கியம் 1143135000002966 ன் 01.04.2023 முதல் 25.06.2024 க்கான வங்கி கணக்கு அறிக்கை ஆகியவற்றை கொண்டுவந்துள்ளேன்.

**2. 27.08.2010 ம் தேதிய கூட்டுவியாபார ஒப்பந்த பத்திரத்தின் நகல் சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **எதிரியின் கணவர் எங்கள் பைனான்ஸில் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்தியதை நாங்கள் வரவு வைத்துள்ள நோட்டில் கண்ட பதிவு நகல் (அசல் நோட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் மேற்படி **Heera Capital வங்கி கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி கரூர் மத்திய கிளையில் கணக்கியம் 1143135000002966 ன் 01.04.2023 முதல் 25.06.2024 க்கான வங்கி கணக்கு அறிக்கை சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. Heera Capital Finance ல் பதிவு சான்றிதழை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் எடுத்து வரவில்லை. எதிரியின் கணவர் எங்கள் பைனான்ஸ்ல் கடன் பெறும்போது கொடுத்த ஆவணங்களை

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

கொண்டுவந்துள்ளேனா என்றால் அவர் கடன் கணக்கை முடித்து விட்டதால் அவர் கொடுத்த ஆவணங்களை அவரிடம் திரும்ப கொடுத்துவிட்டோம். எதிரியின் கணவர் கடன் தவனை தொகைகளை திரும்ப செலுத்தியதற்கான ரசீது அடிநகலை கொண்டு வந்துள்ளேனா என்றால் அவ்வாறு ரசீது வழங்கம் பழக்கம் இல்லை. எதிரியின் கணவர் வாங்கிய கடன் நிலுவையில் உள்ளதா அல்லது முடிக்கப்பட்டதா என்றால் முடிந்துவிட்டது. அதற்கான குறிப்பேடை கொண்டு வந்துள்ளேனா என்றால் நாங்கள் ஒரே ஒரு நோட்டில் மட்டும்தான் கடன் தொகை பற்றிய விவரங்களை பராமரித்து வருகிறோம் அதனை நீதிமன்றத்தில் (சா.சா.ஆ.2) தாக்கல் செய்துள்ளேன். எங்கள் நிறுவனத்தில் எதிரியின் கணவர் வாங்கிய கடனுக்கான கணினி பதிவு தகவல் 2019 முதல் நாளது தேதி வரையிலான பதிவு தகவல்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் நாங்கள் கணினி வைத்து பராமரிப்பது இல்லை. 2019 முதல் 2023 வரை எங்கள் நிறுவனம் பயன்படுத்தி வரும் Daily Note ஐ கொண்டுவந்துள்ளேனா நாங்கள் Daily Note என்ற ஒரு நோட்டை பராமரித்ததே கிடையாது. எங்கள் நிறுவனம் 2019 முதல் 2023 வரை நடத்திய General Body தீர்மானத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் நானும் எனது மனைவியும் மட்டும் தான் பைனான்ஸை நடத்தி வருவதால் அவ்வாறு ஒரு General Body Meeting நடைப்பெற்றதே இல்லை.

4. சா.சா.ஆ.2 குறிப்பு அடங்கியதும் சாட்சி கொண்டுவந்ததும் ஆன நோட்டினை சாட்சியிடம் காண்பித்து அதில் எந்த நிறுவனத்தை சார்ந்தது என்ற பெயரோ சீலோ இல்லை என்றால் சரிதான். எதிரியின் கணவர் சுதாகர் கடனை திருப்பி செலுத்தியதற்கான குறிப்புகள் அடங்கிய பகுதியில் எவ்வித கையொப்பமும், சீலோ மற்றும் எங்கள் நிறுவனத்தின் பெயர் மற்றும் சீல் இல்லை என்றால் சரிதான். எதிரியின் கணவர் சுதாகர் கடனை முடித்ததற்கான சீலோ குறிப்போ இல்லை என்றால் எதிரி தவனை தொகை செலுத்திய பின் NIL என்ற

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

குறிப்புமட்டும் எழுதினோம். சாட்சி சான்றாவணம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் நகலில் தாக்கல் செய்யும் நிலையில் அதில் எங்கள் நிறுவனத்தின் சீலை வைப்பதற்காக கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை.

5. இவ்வழக்கின் புகார்தாரர் நான் என்பதாலும் நான் சாட்சி சொல்வதற்காக வந்துள்ள Heera Capital Finance ன் உரிமையாளரும் நான் என்பதாலும், இவ்வழக்கில் சாட்சியமளிக்க வரப்பெற்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள அசல் ஆவணங்களை கொண்டு வந்தால் எனது வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் நான் கொண்டு வரவில்லை என்றால் சரியல்ல. என் வசம் உள்ள ஆவணங்களைக் கொண்டு வந்துள்ளேன். நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ள சா.சா.ஆ.1, சா.சா.ஆ 2 ஆகிய ஆவணங்கள் என்னால் போலியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் அதனால் தான் எங்கள் நிறுவனத்தின் சீலை சா.சா.ஆ.1, சா.சா.ஆ 2 ஆகியவற்றில் வைக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**